பழனி சித்த மருத்துவக் கல்லூரி.

729 (*வினா எண். 7007)—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி சித்த மருத்துவக் கல்லூரியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை வருகிற கல்வியாண்டில் கூடுதல் ஆக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் சித்த மருத்துவ பட்டதாரிகள் எவ்வளவு பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்? அதோடு, தமிழகத்தில் புதிதாக சித்த மருத்துவக் கல்லூரி துவங்கும் திட்டம் உள்ளதா? தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற ‘எய்ட்ஸ்’ வியாதிக்கு இந்தச் சித்த மருத்துவத்தின் மூலமாக மருந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி ஏதாவது குறிப்பு அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் சித்த மருத்துவப் பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் இன்னும் வேலைவாய்ப்புக்கள் இருந்தும்கூட, நமக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு டாக்டர்கள் கிடைக்கவில்லை. ஆகவே, அதிகாரபூர்வமாகச் சொல்ல வேண்டுமென்றால், இங்கு வேலைவாய்ப்பு கேட்டு யாருக்கும் மறுக்கப்படவில்லை. அடுத்தபடியாக இப்போது பழனியிலே ஒரு சித்த மருத்துவக் கல்லூரி கட்டடம் கட்டுவதற்கான குறிப்புக்கள் நம்மிடத்திலேஇருக்கின்றன. ஆகவே, பழனியில் ஒரு சித்த மருத்துவக் கல்லூரி கட்டடம் கட்டப்பட இருக்கிறது. அந்த சித்த மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சித்த மருத்துவக் கல்லூரியை நாம் ஏற்படுத்த இருக்கிறோம். மேற்படி கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்கென ரூ. 60 லட்சம் செலவில் பகுதி-2 திட்டமாக இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அரசுக்கு னுப்பியுள்ளார். ஆனால் இத்திட்டத்திற்கு நிதித் துறை ஒப்புக்கொள்ளாததால் இந்தத் திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரியைத் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது துவக்கியிருக்கிறோம். எய்ட்ஸ் நோயைப் பொறுத்த வரையில் சித்த மருத்துவத்தில் மருந்து இருக்கிறது என்று அதிகார பூர்வமாக நமக்கு எந்தத் தகவலும் வரவில்லை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெரும் பீதியையும், பெரும் பயத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் எய்ட்ஸ் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக விசேஷ பயிற்சி பெறுவதற்கு சென்னை டாக்டர்கள் குழு ஒன்று அமெரிக்காவிற்குச் செல்வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நான் அமைச்சரின் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புவதெல்லாம் பழமையும் தொன்மையும் பொருந்திய சித்த வைத்தியத்தில் அந்த எய்ட்ஸ் நோயைக் கண்டிப்பாகக் களைய முடியும் என்று சித்த டாக்டர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, நம்முடைய டாக்டர்கள் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு முன்னால் நல்ல திறமையும் அனுபவமும் மிக்க சித்த டாக்டர்களை அழைத்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு அதன் மூலமாக இந்த நோயைக் களைவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னது மாதிரி, அதிகார பூர்வமாக சில மருந்துகள் இருக்கின்றன என்பது பற்றி நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் யாராவது சித்த மருத்துவர்கள் இப்படிப்பட்ட மருந்துகள் இருக்கின்றன என்றுகூற முன்வருவார்களேயானால் அதை நம்முடைய இலாகாவின் மூலமாக அல்லது எக்ஸ்பர்ட்ஸ் மூலமாக, சிறப்பு டாக்டர்கள் மூலமாக ஆராய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியில் சித்த மருத்துவக் கல்லூரி பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பழனியிலே உள்ள சித்தர்களிலே பெரும்பாலானவர்கள் திருவண்ணாமலையிலேயிருந்துதான் சென்றிருக்கிறார்கள். இன்றைக்கும் திருவண்ணாமலையில் உள்ள காட்டுப் பகுதிகளிலே சித்தர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் மஞ்சள் காமாலை நோய் கண்டவர்கள் திருவண்ணாமலைக்கு வந்து 3 தினங்கள் தங்கியிருந்து சித்த மருத்துவர்களால் பச்சிலை கொடுத்து, வைத்தியம் செய்யப்பட்டு நல்ல முறையில் பலன்பெற்றுச் சென்றிருக்கிறார்கள். உயர் அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள் வந்திருக்கிறார்கள். எனவே, சித்தர்கள் வாழுகின்ற அந்தத்

1986 மே 10]

திருவண்ணாமலையிலே சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படியில்லையென்றால் இனிமேலாவது அமைச்சரவர்கள் அதைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டா எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலே சித்த மருத்துவக் கல்லூரி நல்லமுறையில் இயங்க ஆரம்பித்தபிறகுதான் இன்னொரு சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பது பற்றி யோசிக்க வேண்டும். சித்த மருத்துவக் கல்லூரிக்கு அடுத்த நான்காண்டுகளில் இவ்வளவு தொகை செலவழிக்கக் கருதியுள்ளோம். அதுமட்டுமல்லாமல் இப்பொழுது நாம் ஒரு பில்டிங்கை வாடகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு இடத்திலே நாம் அமைத்திருக்கிறோம். ஆனால் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக நிரந்தரமாக ஒரு கட்டிடம் தேவைப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் வார்டுகள் தேவை. ஆகவே, இவைகளை அமைத்து இந்த சித்த மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தியதற்குப் பிறகு அடுத்து இன்னொரு சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பது பற்றிச் சிந்திக்கலாம்.

அடுத்து, திருவண்ணாமலையில் சித்தர்கள் இருக்கிறார்கள். என்று சொன்னார்கள். அந்தச் சித்தர்களை நிச்சயமாக பழனி சித்த மருத்துவக் கல்லூரி பயன்படுத்திக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் டையலைசர் கருவி.

730. (*வினா எண். 8912)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் டையலைசர் கருவிகள் உள்ளனவா?

(ஆ) 'டையலைசர்' பிரிவு அனைத்துக் கல்லூரிகளிலும் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ, ஆ மற்றும் இ) தமிழகத்தில் உள்ள கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மட்டும் டையலைசர் கருவிகளும் டையலைசர் பிரிவுகளும் உள்ளன—

1. சென்னை, அரசு பொது மருத்துவமனை.
2. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை.